பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 03 2024 **TUESDAY** 6 30 **PM**

வணக்கம், ஆல் இண்டியா ரேடியோ, சென்னை - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம், இலவச ரேஷன் உள்ளிட்ட திட்டங்களால் தமிழகத்தைச் சேர்ந்த பெண்கள் பல்வேறு இன்னல்களிலிருந்து மீண்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மாநில உரிமைகளை மீட்டெடுக்க எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி அயராது பாடுபடும் என்று திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. தமிழகம் முழுவதும் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

4. குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு இடைக்கால தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் குல்ஷன் குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம், இலவச ரேஷன் உள்ளிட்ட திட்டங்களால் தமிழகத்தைச் சேர்ந்த பெண்கள் பல்வேறு இன்னல்களிலிருந்து மீண்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் பிஜேபி சார்பில் இன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், மகளிர் நலனில் பிஜேபி அரசு எப்போதும் அதிக அக்கறை செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

முத்ரா வங்கிக் கடன் திட்டத்தின் கீழ், தமிழகம் மிகுந்த பயனடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

திமுகவும், காங்கிரசும் நாணயத்தின் இருபக்கங்கள் எனவும், குடும்ப அரசியலையும், ஊழலையும் இக்கட்சிகள் பிரதானமாக கொண்டு செயல்படுவதாகவும் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

தமிழ் கலாச்சாரத்தை காக்க பிஜேபி அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக கூறிய அவர், நாடாளுமன்றத்தில் செங்கோல் நிறுவப்பட்டுள்ளது குறித்து எதிர்க்கட்சிகள் பல்வேறு விமர்சனங்கள் செய்ததை சுட்டிக்காட்டினார்.

இக்கூட்டத்தில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை, கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், பாமக நிறுவனர் டாக்டர்ச. ராமதாசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

>>>>><<<<<

மாநில உரிமைகளை நிலைநாட்ட எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி அயராது பாடுபடும் என்று திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பே, கொள்கை ரீதியாக ஏற்பட்ட கூட்டணியின் அடிப்படையில் திமுக களமிறங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கூட்டணியில் உள்ள சில கட்சிகளுக்கு தொகுதிகளை ஒதுக்க முடியாவிட்டாலும், அந்த கட்சிகள் கூட்டணி வெற்றிக்கு ஆதரவு தெரிவித்திருப்பது அக்கட்சிகளின் ஜனநாயக மாண்பை வெளிப்படுத்துவதாக திரு. மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மதுரையில், மாவட்ட ஆட்சியர் திருமதி. சங்கீதா தலைமையில் அனைத்து துறை அதிகாரிகளின் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

நாமக்கல்லில் 'தேர்தல் பருவம் - தேசத்தின் பெருமிதம்' என்ற தலைப்பில் மாவட்ட ஆட்சியர் திருமதி உமா தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அரியலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் ஆனிமேரி ஸ்வர்னா பங்கேற்று, 'என் வாக்கு - என் உரிமை' என்ற செல்ஃபி முனையத்தை தொடங்கி வைத்தார்.

மயிலாடுதுறையில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள செல்ஃபி முனையத்தில், அரசு அலுவலர்கள் செல்ஃபி புகைப்படம் எடுத்து, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

சிவகாசியில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. ஜெயசீலன் தொடங்கி வைத்தார்.

ராமநாதபுரத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, மாவட்ட மகளிர் திட்டத்துறை சார்பில் கோலப்போட்டி இன்று நடைபெற்றது.

தென்காசியில் 3 லட்சம் வாக்காளர்களிடம் கையெழுத்து பெறும் இயக்கத்தை மாவட்ட ஆட்சியர் திரு. கமல் கிஷோர் இன்று தொடங்கி வைத்தார்.

திருச்சி ஸ்ரீரங்கத்தில் கோட்டாட்சியர் தலைமையில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திருப்பத்தூரில் மாவட்ட ஆட்சியர் திரு. தர்பகராஜ் தலைமையில், திருநங்கைகள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலை ஒட்டி தமிழகம் முழுவதும் வாகன சோதனை தீவிரம் அடைந்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் அருகே தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில், ஆவணம் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட ஒரு லட்சத்து 68 ஆயிரம் ரூபாயை பறிமுதல் செய்தனர்.

மதுரையில் வாகன தணிக்கையின் போது, உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 2 லட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசுகளை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலை ஒட்டி, தமிழகம் முழுவதும் தேர்தல் ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிருஷ்ணகிரியில் தேர்தல் பணியில் ஈடுபடும் அதிகாரிகளுக்கான ஒருநாள் பயிற்சி ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான திருமதி. சரயு தலைமையில் இன்று நடைபெற்றது.

வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது.

பெரம்பலூரில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தை கையாளும் நடைமுறைகள் குறித்து மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.

தருமபுரியில் உள்ள கண்காணிப்பு மையத்தில், தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான திருமதி. சாந்தி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

தேர்தல் குறித்த விளம்பரங்களை கண்காணிக்க 24 மணிநேரமும் செயல்படும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், மூன்று குழுவினர் சுழற்சி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வீட்டில் இருந்தபடியே வாக்களிக்க 12-**D** படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம் என்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. உமா கூறியுள்ளார்.

வாக்குச்சாவடிக்கு நேரில் வந்து வாக்களிக்க விரும்பும் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இதற்கான படிவங்கள் விநியோகிக்கும் பணி இன்று தொடங்கியிருப்பதாக மாவட்ட ஆட்சியர் திருமதி. சங்கீதா கூறியுள்ளார்.

(சவுண்ட் பைட் - சங்கீதா 35 செகண்ட்ஸ்)

மக்களவைத் தேர்தலை ஒட்டி, தஞ்சாவூரில் இன்று பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல்துறையினரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஆசிஷ் ராவத், மாவட்டத்தில் 45 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாக கூறினார்.

அந்த பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

72 கண்காணிப்புக் குழுவினர் மாவட்டம் முழுவதம் சுழற்சி முறையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் திரு. ஆசிஷ் ராவத் கூறினார்.

ஊடக கண்காணிப்பு குழுக் கூட்டம், மாவட்ட ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திரு. லெட்சுமிபதி தலைமையில் இன்று தூத்துக்குடியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய அவர், தேர்தல் தொடர்பான விளம்பரங்களை ஊடக கண்காணிப்பு குழுவின் அனுமதி பெற்ற பின்னரே வெளியிட வேண்டும் என்று கூறினார்.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் முதல்முறையாக வாக்களிக்கவுள்ள இளைஞர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

முதல் முறை வாக்களிப்பதை மகிழ்ச்சியுடன் எதிர்நோக்கியிருப்பதாக விருதுநகரைச் சேர்ந்த கல்லூரி மாணவி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மாணவி(1) - 31 செகண்ட்ஸ்)*

வாக்களிப்பது அனைவரது கடமை என்று தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மாணவி(2) - 22 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு இடைக்கால தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இச்சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 237 மனுக்களை இன்று விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் தலைமையிலான அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

மேலும் இந்த மனுக்கள் தொடர்பாக, மூன்று வாரத்தில் பதிலளிக்குமாறு அரசுக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், விசாரணையை ஏப்ரல் மாதம் 9ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தது.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மக்களவைத் தேர்தலை ஒட்டி, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் துப்பாக்கி உரிமம் பெற்றுள்ளவர்கள், தங்களது துப்பாக்கிகளை அருகில் உள்ள காவல்நிலைய பொறுப்பு அலுவலரிடம் ஒப்படைக்குமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி. மெர்ஸி ரம்யா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

மதுரை மாவட்டம், அழகர்கோவில் கள்ளழகர் திருக்கோவில் சித்திரை பெருந்திருவிழா நிகழ்ச்சிகள் ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் மாதம் 28ஆம் தேதிவரை நடைபெறும் என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களுக்கு எதிராக கடந்த ஏழு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 60 பேர் கைது செய்யப்பட்டு, 34 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாநகர காவல்துறை கூறியுள்ளது.

>>>>><<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் குல்ஷன் குமார் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அவர் ஆஸ்திரேலியாவின் **Ricky Tang**–ஐ 21-18, 21-8 என்ற செட்கணக்கில் அவர் வென்றார்.

>>>>><<<<<

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டி **Basel** நகரில் இன்று தொடங்கியது.

>>>>><<<<<